# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.98/2025** |
| Deposition of witness | : | P.W.4 |
| Name | : | செந்தில்குமார் |
| Father's /Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | காங்கேய நகரம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 45 |
| Occupation | : | பூசாரி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day of October 2025.
A1 , A2, A4, A5 present. A3 absent. Petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் காங்கேய நகரம் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். பூசாரி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கோபிசங்கர் எனது சகோதரர். அ.சா.2 கிருஷ்ணமூர்த்தி எனது அப்பா. அ.சா.3 பாமா எனது சகோதரி. கடந்த 20.05.2024 ம் தேதியன்று மன்மத சுவாமி கோவிலில் திருவிழா நடந்தது. அதற்காக எனது சகோதரர் கோபிசங்கரும் சகோதரி பாமாவும் ஊருக்கு வந்திருந்தார்கள். மாலை 07.30 மணிக்கு எதிரிகள் 5 பேரும் எங்கள் வீட்டு வாசலுக்கு வந்தார்கள். எனது சகோதரர் கோபிசங்கரை பார்த்து குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று திட்டினார்கள். எதிரிகள் மகேஷ், விக்னேஷ், கலையரசன், முத்துராமன் ஆகியோர் எனது தம்பியை அடித்தார்கள். எனது தம்பியை செங்கல்லால் அடித்ததில் பல்லில் காயம் ஏற்பட்டது. தடுக்க சென்ற எனது அப்பாவையும் அடித்தார்கள். நானும் தடுக்க சென்றேன் என்னையும் மரக்கட்டை ரீப்பரால் தலையில் அடித்தார்கள். நான் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு சென்று தையல் போட்டு சிகிச்சை பெற்று குடவாசல் வந்து போலீசில் complaint கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் 21.05.2024 அன்று காலை 08.00 மணிக்கு

மகேஷ், விக்னேஷ், கலையரசன் எங்களை தகாத வார்த்தைகளால் பேசி அடித்தார்கள். எனக்கு காயம் அதிகமானதால் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். இது சம்மந்தமாக குடவாசல் போலீஸ் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 20.05.2024 ம் அன்று வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். மருத்துவர் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று கேட்டார் விபரம் சொன்னேன். காயத்தை குறித்துக்கொண்டார்கள். எனது இடது பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. தையல் போட்டார்கள். பின்னிட்டு குடவாசல் காவல் உதவி ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவரிடம் நடந்த விபரத்தினை எழுதிக்கொடுத்தேனா என்றால் எழுதிகொடுத்தேன். வலங்கமைான் மருத்துவமனைக்கு அ.சா.1 வரவில்லை என்றால் சரிதான். 21.05.2024 ம் தேதி ஏற்பட்ட காயத்தினை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். 21.05.2024 அன்றும் போலீசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் எனது ஊர் மாரியம்மன் கோவில் பூசாரியாக இருந்து வருகிறேன் இதற்கிடையில் பூசாரி வேலையை பிடுங்கிவிடுவதாக பஞ்சாயத்தில் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். அவ்வாறு சொன்னதற்கு காரணம் இந்த பிரச்சனை தான் என்றால் சரிதான். 1, 2 எதிரிகளின் குடும்பத்தார்கள் பஞ்சாயத்திற்கு கட்டுப்பட்டார்கள் என்றால் சரிதான். அதனால் அவர்கள் கொடுத்த புகாரை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த பிரச்சனையை அ.சா.1 ம் , மணிகண்டனும் எதிரிகள் 1, 2 சகோதரியை பெண் கேட்டதால் தான் என்றால் சரிதான். 20.05.2024 அன்று மாலை 07.30 மணிக்கு காவடி வந்து கொண்டிருந்தது நான் மாரியம்மன் கோவிலில் திருநீறு கொடுத்துக்கொண்டிருந்தேன். ஊர் மக்கள் அனைவரும் காவடியுடன் வந்தார்கள். அப்போது தான் அ.சா.1 ம் மணிகண்டனும் பெண் கேட்டார்கள் என்றால் சரிதான். 1, 2 எதிரிகள் சகோதரியிடம் மணிகண்டனும் அ.சா.1 ம் அநாகரிகமாக நடந்து கொண்டதால் ஊர்மக்கள் அவர்களை கண்டித்தார்கள் என்றால் சரிதான். என்னை திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு எனது மாமா மகன் நாகேந்திரன் அழைத்து சென்றார். அங்கு மருத்துவர் விசாரித்தார் விபரம் சொன்னேன். அதை எழுதி கொண்டார்கள். நான் திருவாரூர் மருத்துவனையில் இருந்த விபரத்தை போலீசார்

விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் பெண் தகராறில் ஈடுபட்டதால் ஊர்மக்கள் எங்களிடம் நல்ல உறவுமுறையில் இல்லை என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் அ.சா.1, அசா.2 சொல்லியதன் பேரில் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.14 10:18:53 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`